செ. கு. எண்: 110 நாள்:14.09.2019

**நீர்மேலாண்மையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அரசின் சாதனைகள் – தி.மு.க. வின் துரோகங்கள் – திரு.துரைமுருகன் அவர்களது அறிக்கைக்கு மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களின் பதில் அறிக்கை.**

------

மத்திய அரசின் ஆட்சிக்கட்டிலில் அங்கம் வகித்தும், மாநிலத்தில் பல ஆண்டுகள் ஆட்சி பொறுப்பில் இருந்தும், காவேரி நதி நீர் பிரச்னை, முல்லை பெரியாறு பிரச்னை போன்ற பிரச்னைகளில் ஒரு துரும்பை கூட கிள்ளிப்போடாத திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த திரு.துரைமுருகன் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா வழியில் நடைபெறும் அரசின் நீர் மேலாண்மையின் செயற்கரிய செயல்பாடுகளைப்பற்றி குறை கூறியுள்ளது மிகவும் வேடிக்கையாக உள்ளது.

தி.மு.க ஆட்சிக் காலத்தில்தான் காவேரி நதி நீர் பிரச்னையில் தமிழ்நாட்டின் உரிமைகள் தாரைவார்க்கப்பட்டது. காவேரி நதியின் உப நதிகளான கபினி, ஹேமாவதி, ஹாரங்கி, சொர்ணாவதி ஆகியவற்றில் பல்வேறு கட்டுமான பணிகள் நடந்தபோது மௌனம் காத்தது தி.மு.க தான் என்பது நாட்டு மக்கள்அறிந்ததே.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மற்றும் அம்மா அவர்கள் வழியில் செயல்படும் அரசால் மேற்கொள்ளப்பட்ட தொடர் சட்டப்போராட்டத்தினால், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை, காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகள் மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டன.** இதனால் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கு நீர் கிடைத்து, தமிழ்நாட்டின் உரிமைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.

முல்லை பெரியாறு அணை விஷயத்தில் கூட, அதன் முழு நீர் மட்டமான 152 அடி வரையில் நீரை தேக்கி வைப்பதற்கு தி.மு.க அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், தற்பொழுது நீர் மேலாண்மை குறித்து பேசுவதற்கு தகுதி ஏதுமில்லை. **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்ட தொடர் சட்ட போராட்டத்தினால், முதற்கட்டமாக அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடிக்கு உயர்த்துவதற்கு உச்சநீதிமன்றத்தில் ஆணை பெறப்பட்டது, வரலாற்று சாதனை ஆகும்.** இவ்வணையின் நீர்மட்டத்தை அதன் முழு நீர் மட்ட அளவான 152 அடி வரையில் தேக்கி வைப்பதற்கான நடவடிக்கைகளை இவ்வரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்ற பிறகு, ஏராளமான புதிய நீர் மேலாண்மை திட்டங்களை அறிவித்து

செயல்படுத்தி வருகின்றது. முக்கியமாக, நீர்நிலை ஆதாரங்களை, **பொதுமக்கள் பங்களிப்புடன் தூர் வாரும் குடிமராமத்து திட்டம் 2016–2017**ஆம் ஆண்டு **100** கோடி ரூபாய் மதிப்பீட்டில் **1,513** பணிகளும், **2017–2018**ஆம் ஆண்டில் **329** கோடி ரூபாய் மதிப்பீட்டில் **1,511** பணிகளும் முடிக்கப்பட்டன. இந்த நிதியாண்டில், **500** கோடி ரூபாய் மதிப்பீட்டில் **1,829** பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டன. மேலும், **டெல்டா மாவட்டங்களில் உள்ள கால்வாய்களை தூர் வாரும் பணி 61** கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு கடைமடை வரை காவேரி நீர் சென்றடைந்த விவரம் செயதித்தாள்களில் வந்ததை திரு.துரைமுருகன் ஏன் கவனிக்கவில்லை?

பாசனம் மற்றும் குடி நீர் பயன்பாட்டிற்கு உரிய நேரத்தில் நீர் வழங்கவும், நீர்த் தேக்கங்களின் கொள்ளளவினை தூர் வாரி மீட்டெடுக்கவும், பயனாளிகளுக்கு **விலையில்லாமல் வண்டல் மற்றும் சவுடு மண் வழங்க** மேட்டூர் அணை உட்பட பல நீர் ஆதாரங்களை தூர் வார நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதேபோன்று, சென்னை மக்களின் குடி நீர் ஆதாரமாக இருக்கின்ற சோழவரம், புழல் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகளின்

கொள்ளளவு திறனை அதிகரிப்பதற்காக தூர் வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், காவேரி ஆற்றில் வரும் உபரி நீரை தேக்கி வைப்பதற்கு மூன்று புதிய கதவணைகள் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் கிராமங்களுக்கிடையே 428 கோடி ரூபாய் செலவில் புதிய கதவணை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. கரூர் மாவட்டம் நஞ்சை புகலூர் கிராமத்தில் கதவணை அமைக்கும் பணி 495 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ள ஆய்வுப்பணி நடைபெறுகிறது. மற்ற இரண்டு இடங்களில் திட்ட ஆய்வுப் பணிகளுக்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

காவேரி ஆற்றின் குறுக்கே மாண்புமிகு அம்மாவின் அரசு ஐந்து அணைகள் கட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. ஆனால், நீர் மேலாண்மை பற்றி இவ்வரசை குறைகூறும் தி.மு.க, ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது எத்தனை அணைகளை கட்டியது? காவேரி, முல்லை பெரியாறு, பாலாறு போன்ற நதிநீர் பிரச்னைகளில், தி.மு.க தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்ததை தவிர வேறு எதையும் செய்யவில்லை என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

காவேரி நீர் மாசுபடுவதிலிருந்து மீட்டெடுத்து, காவேரி நதியை புனரமைக்க மாண்புமிகு அம்மாவின் அரசால் "**நடந்தாய் வாழி காவேரி**" என்ற திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உருவம் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் குறித்து மாண்புமிகு இந்திய குடியரசு தலைவர் அவர்களால் பாராளுமன்றத்தில் பாராட்டி பேசப்பட்டுள்ளது திரு.துரைமுருகன் அவர்களுக்கு தெரியாதா?

நீர் மேலாண்மையை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்து வருகிறார்கள். இதற்கென, **மழைநீர் சேகரிக்கும் திட்டம், தமிழ்நாடு நீர் மேலாண்மை இயக்கம்** ஆகியவை மக்கள் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருவது மாண்புமிகு அம்மா அரசின் சாதனை.

திருவள்ளூர் மாவட்டம் தேர்வாய்கண்டிகையில் 380 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் புதிய நீர் தேக்கத்தினால் 1 டி.எம்.சி. நீர் சென்னை குடிநீர் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது.

பல நாள் கனவாக இருந்த அத்திக்கடவு – அவிநாசி திட்டத்திற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை தி.மு.க மேற்கொள்ளாமல் வெறும் பேச்சளவிலேயே இத்திட்டத்திற்கு

வாக்குறுதியை அளித்து வந்தது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசால், இத்திட்டத்தினை நிறைவேற்றியே தீரவேண்டும் என்ற கொள்கையோடு, **1652 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மாநில நிதியிலிருந்து செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டு,** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 28.2.2019 அன்று இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தமிழ்நாடு பாசன மேலாண்மை நவீனப்படுத்தும் திட்டம்** உலக வங்கி நிதி உதவியுடன் **2,131 கோடி ரூபாய் மதிப்பீட்டில்** தயாரிக்கப்பட்டு, முதற்கட்டமாக 787 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏரிகள், அணைக்கட்டுகள், டெல்டா பகுதியிலுள்ள வடிகால்கள், பாசன வாய்க்கால்கள் மேம்படுத்தும் பணிகள் மற்றும் நிலத்தடி நீர் செரிவூட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் கிடைக்கக் கூடிய ஒரு சொட்டு நீர் கூட வீணாகாமல் சேமித்து பயன்படுத்த, ஓய்வுபெற்ற அனுபவம் மிக்க பொறியாளர் குழு அமைக்கப்பட்டு, அக்குழு பரிந்துரைக்கும் அரிய பல நீர் மேலாண்மை திட்டங்கள் அரசால் செயல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் தமிழ்நாட்டின் நீர்வள ஆதாரம் மேம்படும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

இதுபோன்ற தொலைநோக்கு பார்வையுடனும், மக்கள் பங்களிப்புடனும் நீர் மேலாண்மை திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை குறை கூறுவதை தவிர, ஆக்கப்பூர்வமான சிந்தனைகள் இல்லாத தி.மு.க வை மக்கள் நன்றாகவே அறிவார்கள்.

நீர் மேலாண்மை பற்றி பேசும் தி.மு.க, மத்திய அரசில் இரண்டு முறை பங்கு வகித்தபோது, நீர் மேலாண்மை மற்றும் வேளாண்மை துறைகளை கேட்டுப் பெற்றார்களா ? காவேரி பிரச்னையை தீர்க்க முனைந்தார்களா ? அவர்கள் தங்களுக்கு எது தேவையோ அவற்றை மட்டுமே கேட்டுப் பெற்றுக் கொண்டார்கள். நீர் மேலாண்மையில் தி.மு.க தனது தோல்வியை ஒப்புக்கொள்ள முடியாமல், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அரசின் சாதனைகளை மூடி மறைக்க பார்க்கின்றது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இவ்வரசின் நீர் மேலாண்மை பணிகளை, தி.மு.க எத்தகைய புளுகு மூட்டைகளை கொண்டு மறைக்க முயன்றாலும், மக்கள் அதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**